**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, VELLORE**

**DEPOSITION OF WITNESS**

**CC.No.560/2020**
**IN**
**Cr.No.35/2018**
**DCB, Vellore**

| | |
|---|---|
| Deposition of Prosecution witness | : **PW14 (LW15)** |
| Name | : கவிதா |
| Husband Name | : ரமேஷ் |
| Village | : செய்யாறு |
| Taluk | : செய்யாறு |
| Occupation | : காவல் ஆய்வாளர் |
| Age | : 48 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of July 2026 at Time 2.53 p.m to 03.06 p.m**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**அரசு தரப்பு முதல் விசாரணை–**

நான் தற்போது செய்யாறு மதுவிலக்க அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் எனக்கு முன்பாக இருந்த காவல் ஆய்வாளர் திருமதி.புஷ்பலதா அவர்கள் புகார்தாரரிடம் இருந்து பெற்ற புகாரின் அடிப்படையில் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.35/2018 பிரிவுகள் 465, 468, 471, 420 இதச படி

பதிவு செய்தார். அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 22.02.2021-ம் தேதி நான் வேலூர் மாவட்ட குற்றபிவிரில் பணிபுரிந்தபோது வேலூர் மாவட்ட குற்றபிரிவு குற்ற எண். 35/2018 வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சி அஸ்லம்பாஷா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன்.

23.02.2021ம் தேதி சாட்சிகள் ஏசுதாஸ், கோட்டீஸ்வரன், சீனிவாசலு, கவிதா மற்றும் நிவேதா ஆகியோரை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமமூலம் பதிவு செய்து கொண்டேன். 10.03.2021ம் தேதி சாட்சிகள் சரவணன் சீனிவாசன், ஸ்ரீதர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். அன்றை தேதியே மாலை 6.45 மணிக்கு வழக்கின் எதிரியான வெங்கட்ராமன் என்பவரை கைது செய்தேன்.

மேலும் 11.03.2021ம் தேதி சாட்சிகள் கனகராஜ், சுபாஷ்சந்திரபோஸ் ஆகியோர் முன்னிலையில் காலை 9 மணி முதல் 10.30 மணி வரை எதிரி வெங்கட்ராமனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், சாட்சிகள் கனகராஜ், சுபாஷ்சந்திரபோஸ் மற்றும் ஸ்ரீதர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.03.2021ம் தேதி சாட்சி பிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், 01.07.2021ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி வெங்கட்ராமன் மீது பிரிவுகள் 465, 468, 471, 409, 420 இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்து கொண்டேன்.

**அரசு தரப்பு முதல் விசாரணை முடிக்கப்பட்டது.**

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**</u>

எதிரியிடம் சாட்சி வந்துள்ளது என கூறியும் குறுக்கு விசாரணை

செய்ய வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை இந்நீதிமன்றம் முடித்து வைக்கிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**<u>மறுவிசாரணை–</u>இல்லை.**

"17.07.2026 ஆகிய இன்று என்னால் / என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டசரால தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு / படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலத்தாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது".

RUDHRA R
Digitally signed by RUDHRA R
Date: 2026.07.17 17:56:29 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**வேலூர்.**